# உலகில் பிளாஸ்டிக் மாசுபாட்டை முடிவுக்கு கொண்டுவர வேண்டும்: ஜி-20 நாடுகளுக்கு பிரதமர் மோடி வேண்டுகோள்

**சென்னை**: உலகில் பிளாஸ்டிக் மாசுபாட்டை முடிவுக்கு கொண்டுவர பணியாற்றுமாறு ஜி-20 நாடுகளுக்கு பிரதமர் நரேந்திர மோடி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஜி-20 மாநாட்டின் ஒரு பகுதியாக சுற்றுச்சூழல் மற்றும் பருவநிலை நிலைத்தன்மை குறித்த அமைச்சர்கள் கூட்டம் சென்னை கிண்டியில் நேற்று நடைபெற்றது. இதில் காணொலி காட்சி வாயிலாக பிரதமர் நரேந்திர மோடி பங்கேற்று கூட்டத்தை தொடங்கி வைத்தார்.

பின்னர் அவர் பேசியதாவது: ஆறுகள் அதன் நீரை அவைகளே அருந்துவதில்லை, மரங்களும் அதன் பழங்களை அவைகளே உண்பதில்லை. மேகங்களும் அதன் நீரால் விளையும் தானியங்களை அவைகளே உண்பதில்லை. இயற்கை நமக்கு வழங்குகிறது. நாமும் இயற்கைக்கு வழங்கியாக வேண்டும். பூமித் தாயைப் பாதுகாப்பதும் பராமரிப்பதும் நமது அடிப்படைக் கடமையாகும். இந்தக் கடமை நீண்ட காலமாக பலரால் புறக்கணிக்கப்பட்டதால் இன்று இது `பருவநிலை நடவடிக்கை' எனும் வடிவத்தை எடுத்துள்ளது. இந்த பருவநிலை நடவடிக்கை கடைக்கோடி மக்களையும் சென்றடைய வேண்டும்.

பருவநிலை மாற்றம் மற்றும் சுற்றுச்சூழல் பிரச்சினைகளால் குறிப்பாக வளரும் நாடுகள் பாதிக்கப்படுகின்றன. `ஐநா பருவநிலை உடன்படிக்கை' மற்றும் `பாரிஸ் உடன்படிக்கை' ஆகியவற்றின் கீழ் எடுக்கப்பட்ட உறுதிமொழிகள் மீது மேம்பட்ட நடவடிக்கை தேவை.

பல்லுயிர் பாதுகாப்பு, மறுசீரமைப்பு, செறிவூட்டல் ஆகியவற்றில் நடவடிக்கை எடுப்பதில் நாங்கள் தொடர்ந்து முன்னணியில் உள்ளோம். நமது புவிகோளின் 7 வகையான புலிகளைப் பாதுகாப்பதற்காக இந்தியா அண்மையில் `சர்வதேச புலிகள் கூட்டணி'யை அறிமுகப்படுத்தியது. புலிகள் பாதுகாப்பு இயக்கத்தின் விளைவாக, இன்று உலகில் உள்ள புலிகளில் 70 சதவீதம் இந்தியாவில்

காணப்படுகின்றன. சிங்க பாதுகாப்பு இயக்கம், டால்பிஃன் பாதுகாப்பு இயக்கம் ஆகியவை சார்ந்த பணிகளிலும் நாங்கள் ஈடுபட்டுள்ளோம்.

இந்தியாவின் முன்முயற்சிகள் மக்களின் பங்களிப்பால் இயக்கப்படுகின்றன. `அம்ரித் சரோவர் இயக்கம்' என்ற தனித்துவமான நீர் பாதுகாப்பு முயற்சியின் கீழ் ஓராண்டில் 63 ஆயிரத்துக்கும் மேற்பட்ட நீர்நிலைகள் உருவாக்கப்பட்டுள்ளன. எங்கள் `மழை நீரை சேமிப்போம்' இயக்கம் மூலம் 2 லட்சத்து 80 ஆயிரத்துக்கும் மேற்பட்ட நீர் சேகரிப்பு கட்டமைப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. கங்கை நதியை தூய்மைப்படுத்துவதற்காக `நமாமி கங்கைஇயக்கம்' மூலம் ஆற்றின் பல பகுதிகளில் டால்பிஃன் மீண்டும் தோன்றும்ஒரு பெரிய சாதனைக்கு வழிவகுத்துள்ளது.

இந்த சூழலில், பிளாஸ்டிக் மாசுபாட்டை முடிவுக்குக் கொண்டுவர ஒருபயனுள்ள சர்வதேச சட்ட நடைமுறைக்கு ஆக்கப்பூர்வமாக பணியாற்றுமாறு ஜி-20 நாடுகளை கேட்டுக்கொள்கிறேன். இயற்கை அன்னைக்கு நாம் ஆற்ற வேண்டிய கடமைகளை மறந்துவிடக் கூடாது என்பதை மீண்டும் வலியுறுத்த விரும்புகிறேன். இவ்வாறு அவர் கூறினார்.

இந்நிகழ்ச்சியில் மத்திய அமைச்சர் பூபேந்திர யாதவ், அமெரிக்கா, ரஷ்யா,சீனா, பிரான்ஸ், ஜெர்மனி, இங்கிலாந்து,சிங்கப்பூர், ஐக்கிய அரபு அமீரகம், சவுதிஅரேபியா உள்ளிட்ட 33 நாடுகளிலிருந்து சுற்றுச்சூழல் துறை அமைச்சர்கள் மற்றும் உலக வங்கி உள்ளிட்ட 13 அமைப்புகளின் பிரதிநிதிகள் பங்கேற்றனர்.

**இமயமலையில் 60 கோடி ஆண்டுக்கு முன்பிருந்த கடல்: இந்திய - ஜப்பான் ஆய்வில் கண்டுபிடிப்பு**




**பெங்களூரு**: பெங்களூருவைச் சேர்ந்த இந்திய அறிவியல் கழகம் மற்றும் ஜப்பான் நாட்டைச் சேர்ந்த நிகட்டா பல்கலைக்கழக விஞ்ஞானிகள் இமயமலையின் உச்சியில் ஆய்வு நடத்தி வருகின்றனர். இமயமலையில் உச்சியில் உள்ள படிமங்களை ஆய்வு செய்தபோது, அதில் ஒன்றில் நீர்த் துளி சேகரமாகி இருந்ததை அவர்கள் கண்டறிந்தனர்.

அந்த நீர்த் துளியை ஆய்வுக்கு உட்படுத்திய நிலையில், அது 60 கோடி ஆண்டுகளுக்கு முந்தையது என்பது தெரியவந்துள்ளது. எனில், அங்கு, 60 கோடி ஆண்டுகளுக்கு முன்பு கடல் இருந்திருக்கக்கூடும், அந்தக் கடலிலிருந்து அந்த நீர்த் துளி எஞ்சி இருக்கக்கூடும் என்ற முடிவுக்கு அவர்கள் வந்துள்ளனர்

இது குறித்து பெங்களூருவில் உள்ள இந்திய அறிவியல் கழகத்தின் புவி அறிவியல் மையத்தின் ஆய்வு மாணவர் பிரகாஷ் சந்திர ஆர்யா கூறியதாவது: பழமையான கடலின் ஆண்டை நாங்கள் கண்டுபிடித்துள்ளோம். ஆனால், அந்தக் கடலின் தன்மை குறித்து பெரிய விவரங்கள் தெரியவில்லை. தற்போது இருக்கும் கடல்களுக்கும் அப்போதைய கடலுக்கும் என்ன வேற்றுமை, என்ன ஒற்றுமை என்பது குறித்த விவரங்கள் இன்னும் கிடைக்கவில்லை. இந்த விவரங்கள் முழுமையாக கிடைக்கும்பட்சத்தில், அது புவியின் காலநிலை வரலாற்றை புரிந்துகொள்ள உதவியாக அமையும். இவ்வாறு பிரகாஷ் சந்திர ஆர்யா தெரிவித்தார்.

## ஸ்ரீவில்லிபுத்தூர் | சதுரகிரி மலையை ஒட்டிய பகுதியில் காட்டுத் தீ



**வத்திராயிருப்பு**: சதுரகிரி மலையை ஒட்டிய ஊஞ்சக்கல் பகுதியில் நேற்று மாலை திடீரென பரவிய காட்டுத்தீ பற்றி எரிந்து வருகிறது.

ஸ்ரீவில்லிபுத்தூர் - மேகமலை புலிகள் காப்பக வனப்பகுதியில் சாப்டூர் வனச்சரகத்திற்கு உட்பட்ட சுமார் 12 ஆயிரத்துக்கும் அதிகமான ஹெக்டேர் பரப்பளவு உள்ள வனப்பகுதி 9 பீட்களாக பிரிக்கப்பட்டுள்ளது. இதில் 5வது பீட்டில் ஊஞ்சக்கல் பாப்பநத்தான் கோயில் பகுதியில் நேற்று மாலை திடீரென காட்டுத்தீ பற்றியது. மாலை நேரத்தில் காற்று வேகமாக வீசுவதால் காட்டுத்தீ மளமளவென பரவி வருகிறது.

இதையடுத்து ரேஞ்சர் செல்லமணி, பிரபாகரன் தலைமையில் வனத்துறையினர் மற்றும் வேட்டை தடுப்பு காவலர்கள் அடங்கிய 30 பேர் இரு குழுக்களாக பிரிந்து காட்டுத் தீயை கட்டுப்படுத்தும் முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த காட்டுத் தீயால் சதுரகிரி செல்லும் மலைப்பாதையிலோ, கோயிலிலோ பாதிப்பு ஏதும் ஏற்படவில்லை என வனத்துறையினர் தெரிவித்தனர். கடந்த ஜூலை 15-ம் தேதி சாப்டூர் வனச்சரகம் 5வது பீட் தவசிப்பாறை பகுதியில் பரவிய காட்டுத் தீயால் சதுரகிரி கோயிலுக்கு சென்ற பக்தர்கள் அடிவாரம் திரும்புவதில் பிரச்சினை ஏற்பட்டது குறிப்பிடத்தக்கது.

## பருவநிலை மாற்றத்தை எதிர்கொள்வதில் ஜி20 நாடுகளுக்கு தலைமை பங்கு: மத்திய அமைச்சர் பூபேந்திர யாதவ் பெருமிதம்




**சென்னை:** பருவநிலை மாற்றத்தை எதிர்கொள்வதில் ஜி20 நாடுகளுக்கு தலைமைப் பங்கு இருப்பதை அந்நாடுகளில் தலைவர்கள் வலியுறுத்தி இருப்பதாக மத்திய சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அமைச்சர் பூபேந்திர யாதவ் தெரிவித்துள்ளார்.

ஜி20 மாநாட்டின் 4-வது சுற்றுச்சூழல் மற்றும் பருவநிலை நிலைத்தன்மை பணிக்குழு கூட்டம் கடந்த 26, 27-ம் தேதிகளில் சென்னை கிண்டியில் நடைபெற்றது. அதன் ஒருபகுதியாக 27-ம் தேதி மத்திய வனம், சுற்றுச்சூழல் மற்றும் பருவநிலை மாற்றத் துறை அமைச்சர் பூபேந்திர யாதவ் பங்கேற்று ஆதார வளப் பயன்பாடு மற்றும் சுழற்சிப்பொருளாதாரத் தொழில் கூட்டணியை தொடங்கிவைத்தார்.

இதன் தொடர்ச்சியாக சுற்றுச்சூழல் மற்றும் பருவநிலை நிலைத்தன்மை குறித்த பல்வேறு நாடுகளைச் சேர்ந்த சுற்றுச்சூழல் துறை அமைச்சர்கள் கூட்டம் நேற்று நடைபெற்றது.

அதில் காணொலி காட்சி வாயிலாக பிரதமர் நரேந்திர மோடி உரையாற்றினார். இக்கூட்டத்தில் பிற நாடுகளைச் சேர்ந்த 41 அமைச்சர்கள் மற்றும் அவர்களின் பிரதிநிதிகள், ஜி20 உறுப்பு நாடுகளைச் சேர்ந்த 225 பிரதிநிதிகள், 23 சர்வதேச அமைப்புகளின் தலைவர்கள், பிரதிநிதிகள் பங்கேற்றனர்.

இதில் நிலையான மற்றும் நெகிழ்வான நீல மற்றும் கடல் சார்ந்த பொருளாதாரத்துக்கான சென்னை உயர் நிலைக் கொள்கைகள் என்ற இறுதி ஆவணம் ஒருமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. இந்த ஆவணம் 'ஜி20 புதுடெல்லி தலைவர் பிரகடனம் 2023' உடன் இணைக்கப்படுவதற்காக தலைவர்களின் பரிசீலனைக்காக சமர்ப்பிக்கப்படும்.

இறுதி ஆவணத்தையும், தலைமையின் சுருக்க உரையையும் அமைச்சர்கள் ஏற்றுக்கொண்டனர். உலகளாவிய முக்கியத்துவம் வாய்ந்த காலநிலை மற்றும் சுற்றுச்சூழல் தொடர்பான முக்கியமான சவால்கள் குறித்து விவாதங்கள் நடைபெற்றன.

இறுதியாக மத்திய அமைச்சர் பூபேந்திர யாதவ் செய்தியாளர்களிடம் கூறியதாவது: காலநிலை மாற்றம், பல்லுயிர் இழப்பு, மாசுபாடு ஆகியவற்றின் சிக்கலான மற்றும் ஒன்றோடொன்று தொடர்புடைய சவால்களை சமாளிப்பதில் நாடுகளுக்கு இடையிலான ஒத்துழைப்பும், நிலையான மற்றும் நெகிழ்வான எதிர்காலத்தை நோக்கிய ஒருங்கிணைந்த அணுகுமுறையும் பாராட்டுக்குரியது.

தனித்துவமான சவால்கள் மற்றும் திறன்கள் இருந்தபோதிலும், காலநிலை நடவடிக்கை, சுற்றுச்சூழல் நிலைத்தன்மை ஆகியவற்றில் தளராத அர்ப்பணிப்பைக் காட்டியதற்காக ஒவ்வொரு நாட்டுக்கும் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

பருவநிலை மாற்றத்தை எதிர்கொள்வதில் ஜி 20 நாடுகளுக்கு தலைமைப் பங்கு இருப்பதை அந்நாடுகளின் பிரதிநிதிகள் மீண்டும்வலியுறுத்தியுள்ளனர். மேலும் பாரிஸ் ஒப்பந்தத்தின் அனைத்து விஷயங்களின் லட்சிய நடவடிக்கை, சுற்றுச்சூழல் மறுசீரமைப்பு, கடல் சார்ந்த திட்டமிடல் மற்றும் சுழற்சிப் பொருளாதாரம் போன்ற தலைப்புகள் ஜி20 விவாதங்களில் முதல்முறையாக விரிவாக விவாதிக்கப்பட்டன. இவ்வாறு அவர் கூறினார்.

EVA STALIN IAS ACADEMY

## புதுமைப் பெண் திட்டத்தில் 2,11,506 மாணவிகளுக்கு இதுவரை ரூ.160.97 கோடி உதவித் தொகை: தமிழக அரசு




புதுமைப் பெண் திட்டம்

**சென்னை:** புதுமைப் பெண் திட்டத்தில் 2,11,506 மாணவிகளுக்கு இதுவரை ரூ.160.97 கோடி உதவித் தொகை வழங்கப்பட்டுள்ளதாக தமிழக அரசு தெரிவித்துள்ளது.

மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் உயர்கல்வி உறுதித் திட்டம் குறித்து தமிழக அரசு வெளியிட்டுள்ள அறிக்கையில்,"கல்வி கற்ற பெண்களால் மட்டுமே சமூக நீதி, சமத்துவம் ஆகியவற்றை உள்ளடக்கிய பொருளாதார முன்னேற்றம் அடைந்த சமுதாயத்தினரை உருவாக்கிட இயலும் என்பதற்கேற்ப, பெண் கல்வியின் முக்கியத்துவத்தை உணர்ந்த நம் முதல்வரின் உள்ளத்தில் உதித்த உன்னத திட்டம் ”மூவலூர் இராமாமிர்தம் அம்மையர் உயர்கல்வி உறுதி - புதுமைப் பெண் திட்டம்” ஆகும்.

தமிழகத்தில் உள்ள ஏழை எளிய குடும்பங்களைச் சேர்ந்த மாணவியர், பொருளாதார சிக்கல்களின் காரணமாக 12ம் வகுப்பு முடிந்தவுடன் கல்வியை தொடர முடியாமல் போகிறது. எனவே, இந்த மாணவிகளின் கல்வி தடைபடாமல், அவர்களின் உயர்கல்வி சேர்க்கையை அதிகரிக்கும் பொருட்டு சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறையின் மூலம் செயல்படுத்தப்படும் மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் உயர்கல்வி உறுதித்திட்டத்தின் கீழ் 6ம் வகுப்பு முதல் 12-ஆம் வகுப்பு வரை அரசுப் பள்ளியில் படித்து, மேற்படிப்பில் சேரும் அனைத்து மாணவிகளுக்கும் பட்டப் படிப்பு, பட்டயப்படிப்பு,

தொழிற்படிப்பு ஆகியவற்றில் இடைநிற்றல் இன்றி முடிக்கும் வரை மாதம் ரூ.1,000 வழங்கும் திட்டத்தை தமிழக அரசால் அறிவிக்கப்பட்டது.

**இத்திட்டத்தின் மூலம் பயனடைய தேவையான தகுதி விவரங்கள்:**

6ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை தமிழக அரசு பள்ளிகளில் படித்த மாணவிகளாக இருத்தல் அவசியம்

அரசுப் பள்ளிகள் என்பது பஞ்சாயத்து யூனியன் தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகள், ஆதிதிராவிடர் நலப் பள்ளிகள், நகராட்சி பள்ளிகள், மாநகராட்சி பள்ளிகள், பழங்குடியினர் நலப் பள்ளிகள், கள்ளர் சீர்மரபினப் பள்ளிகள், பிற்படுத்தப்பட்டோர்/ மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நல பள்ளிகள், மாற்றுத்திறனாளிகள் நலத்துறை பள்ளிகள், வனத்துறை பள்ளிகள், சமூக பாதுகாப்புத் துறை பள்ளிகள் போன்றவற்றில் பயிலும் மாணவிகளும் இத்திட்டத்தின் கீழ் பயனடைய இயலும்.

இலவச கட்டாயக் கல்வி திட்டத்தின் கீழ் RTE மூலமாக 6-ஆம் வகுப்பு முதல் 8ஆம் வகுப்பு வரை தமிழக தனியார் பள்ளியில் பயின்ற மாணவியர், 9ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை அரசு பள்ளிகளில் பயின்றால் இத்திட்டம் மூலம் பயனடைய முடியும்.

முதன் முதலில் இளநிலை படிப்பில், கலை, அறிவியல், தொழில்முறை படிப்புகள், துணை மருத்துவம், டிப்ளமா, ITI, இளநிலை மற்றும் முதுநிலை இணைந்த படிப்புகள் ஆகியவற்றில் மேற்படிப்பை தொடர விரும்பும் மாணவியருக்கு, அப்படிப்பு முடியும் வரை உதவித்தொகையாக மாதம் ரூ.1000 வழங்கப்படும்.

கலை மற்றும் அறிவியல் படிப்புக்கு முதல் மூன்று ஆண்டுகளும் தொழிற்படிப்புகளில் பொறியியல் படிப்புக்கு முதல் நான்கு ஆண்டுகளும், மருத்துவக் கல்வியில் முதல் 5-ஆம் ஆண்டு வரை பயிலும் மாணவிகளுக்கும் உதவித் தொகை வழங்கப்படும்.

பயிற்சி காலத்திற்கு உதவித் தொகை வழங்கப்பட மாட்டாது.

ஒரே வீட்டில் ஒன்றுக்கும் மேற்பட்ட மாணவியர் இருந்தாலும் இந்த திட்டத்தின் கீழ் உதவி பெறலாம்.

கல்லூரியில் சென்று பயிலும் மாணவியருக்கே இந்த உதவித்தொகை வழங்கப்படும்.

அஞ்சல்வழிக் கல்வி அல்லது அங்கீகரிக்கப்படாத கல்வி நிறுவனங்களில் படிப்பவர்கள் இந்த திட்டத்தின் கீழ் உதவித்தொகை பெற இயலாது.

வேறு திட்டங்களின் கீழ் நிதியுதவி பெறும் மாணவியரும் கூடுதலாக இத்திட்டத்தின் கீழ் உதவித்தொகை பெற இயலும் என்பது இந்த திட்டத்தின் சிறப்பம்சம் ஆகும்.

ஏற்கெனவே உயர்கல்வியில் சேர்ந்த மாணவியரும், மீதமிருக்கும் ஆண்டுகளுக்கான படிப்புக்கு இந்த உதவித்தொகை பெற விண்ணப்பிக்கலாம்.

இத்திட்டத்திற்கென புதிய மறுசீரமைக்கப்பட்ட வலைதளம் (https://www.pudhumaipenn.tn.gov.in) உருவாக்கப்பட்டுள்ளது. மாணவியர்கள் தாங்கள் உயர்கல்வி பயிலும் கல்லூரியின் ஒருங்கிணைப்பாளரைக் கொண்டு இத்திட்டத்தின் கீழ் பதிவு செய்திட இயலும்.

**திட்டத்தின் நோக்கம்**

பெண்களுக்கு உயர் கல்வி அளிப்பதன் மூலம் பாலின சமத்துவத்தை ஏற்படுத்துதல்.

குழந்தை திருமணத்தை தடுத்தல்

குடும்ப சூழ்நிலை மற்றும் வறுமை காரணமாக மேற்படிப்பு படிக்க இயலாத மாணவிகளுக்கு பொருளாதார ரீதியாக உதவுதல்.

பெண் குழந்தைகளின் இடைநிற்றல் விகிதத்தை குறைத்தல்

பெண் குழந்தைகளின் விருப்பத் தேர்வுகளின்படி அவர்களின் மேற்படிப்பை தொடர ஊக்குவித்தல்

உயர் கல்வியினால் பெண்களின் திறமையை ஊக்கப்படுத்தி அனைத்து துறைகளிலும் பங்கேற்க செய்தல்.

உயர்கல்வி உறுதித்திட்டத்தின் மூலம் பெண்களுக்கான தொழில் வாய்ப்புகளை அதிகரித்தல்

பெண்களின் சமூக மற்றும் பொருளாதார பாதுகாப்பை உறுதி செய்தல்

மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் உயர்கல்வி “புதுமைப் பெண் திட்டம்” முதல்வரால் 05.09.2022 அன்று முதல் கட்டமாகவும், 08.02.2023 அன்று 2-ஆம் கட்டமாகவும் துவக்கி வைக்கப்பட்டு சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

புதுமைப் பெண் திட்டத்தின் கீழ் 2022-2023 ஆம் நிதியாண்டில் முதற்கட்டமாக அரசுப் பள்ளிகளில் பயின்று உயர்கல்வி பயிலும் சுமார் 1.16,260 மாணவிகளும், இரண்டாம் கட்டமாக 93,105 மாணவிகளும் பயனடைந்த வகையில் ரூ. 100.11 கோடி ஊக்கத் தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

மேலும், இத்திட்டத்தின் கீழ் 2023-2024-ஆம் நிதியாண்டிற்கு ரூ.349.78 கோடி நிதி ஒதுக்கீடு செய்து வழங்கப்பட்டதில், நாளது வரை ரூ.60.86 கோடி செலவினம் மேற்கொள்ளப்பட்டதில் சுமார் 2,11,506 மாணவிகள் பயனடைந்து வருகின்றனர்.

ஆக இத்திட்டம் துவங்கப்பட்டது முதல் நாளது வரை இத்திட்டத்திற்கென ரூ. 160.97 கோடி பணப்பலனாக மாணவிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. புதுமைப் பெண் திட்டத்தின் கீழ் விண்ணப்பிக்கும் மாணவிகள் தங்களது குறைகளை பதிவு செய்ய வழிவகை செய்யப்பட்டுள்ளது. தமிழக அரசால் செயல்படுத்தப்பட்டு வரும் 'புதுமைப்பெண்' திட்டமானது, மாணவியர், கல்விக்கு ஊக்கமளிப்பதுடன், வரும் காலங்களில் யாரும் மறுக்க முடியாத பெரும் பயன்களை ஏற்படுத்தும் என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை." இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

EVA STALIN IAS ACADEMY